327

# விலைவாசி உயர்வும் தி. மு. க. போராட்டமும்

விலை 8 காசுகள்

கம்யூனிஸ்ட் கட்சி வெளியீடு.

# விலைவாசி உயர்வும் தி. மு. க. போராட்டமும்

★

கம்யூனிஸ்ட் கட்சி வெளியீடு.

விலை 8 காசுகள்

# முன்னுரை

விலைவாசி உயர்வு என்பது சகல மக்களையும் பாதிக்கும் பிரச்சினை. தமிழ்நாடுரீதியாக மட்டுமன்றி அகில இந்தியரீதியாக வும் தீர்வு காணப்படவேண்டிய முக்கிய பிரச்சினை.

இந்தப் பிரச்சினையை ஆளும் கட்சியினர் எவ்விதம் சரியான கண்ணோட்டத்தோடு பார்க்கத் தவறிவிட்டனர்? எவ்விதம் இதற் குத் தகுந்த, உகந்த பரிகாரம் காணத் தவறிவிட்டனர்?

இந்தப் பிரச்சினையை கம்யூனிஸ்ட் கட்சி எப்படிப் பார்க் கிறது? இதற்கு அது கூறும் பரிகாரங்கள் என்ன?

தமிழ்நாடு சட்டமன்றத்தில் 50 இடங்களைப் பெறும் வாய்ப் பைப் பெற்று பிரதான எதிர்க்கட்சியாக இருக்கும் தி. மு. க எவ்வாறு இந்த மக்கள் பிரச்சினையை எடுத்துக்கொண்டு அதன் தலைமையின் குறுகிய தன்னலப்போக்குக் காரணமாக சந்தர்ப் பத்தை வீணாக்கிவிட்டது?

இவற்றைப்பற்றியெல்லாம் தீர்க்கமாக விவாதித்து அண்மை யில் கூடிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழக நிர்வாகக் குழு ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. அத்தீர்மானமே இங்கு புத்தக வடிவில் தமிழ் மக்கள் முன்பு வைக்கப்பட்டிருக்கிறது.

இப்பிரச்சினையைத் தீர்க்க மார்க்கம் என்ன என்பதறியாது மக்கள் தவித்துநிற்கும் வேளையில் இச் சிறுபிரசுரம் அவர்களுக்கு வழிகாட்ட மிகவும் உதவிகரமாக இருக்கும் என்று நம்புகிறோம்.

**தமிழ்நாடு கவுன்சில்.**

# விலைவாசி உயர்வும் தி. மு. க. போராட்டமும்

விலைவாசிகள் மேலும் மேலும் உயர்ந்துவருவதையும், அதனால் மக்களின் வாழ்க்கைத்தரம் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து வருவதையும் கண்டு கம்யூனிஸ்டுக் கட்சியின் தமிழ்நாடு நிர்வாகக் கமிட்டி ஆழ்ந்த கவலைப்படுகிறது. கடந்த ஒரு மாதத்தில் மட்டும் மக்கள் அன்றாடம் உபயோகிக்கும் எண்ணெய், புளி, பருப்பு, மிளகாய் முதலிய பல பொருள்களின் விலை கணிசமான அளவு உயர்ந்துள்ளது.

தேர்தல் காலத்தில் முதலமைச்சர் காமராஜர் உள்பட பல மந்திரிகள் விலைவாசி ஏற்றத்தினால் மக்கள் படும் கஷ்டங்களைக் கண்டு "கண்ணீர்" வடித்தனர். இந்தக் கஷ்டங்களைப் போக்குவதற்காக விலைவாசிகளைக் கட்டுப்படுத்தக் கூடிய உருப்படியான நடவடிக்கைகள், மீண்டும் அவர்கள் அதிகாரத்திற்கு வந்தால், எடுப்பதாக வாக்குறுதி அளித்தனர்.

ஆனால் தேர்தல் முடிந்தவுடன், இவ்வாக்குறுதிகளை நிறைவேற்ற எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. மாறாக, விலைவாசி ஏற்றத்தால் மக்களுக்கு ஏற்படும் ஆத்திரத்தைச் சமாளிப்பதற்காக வளர்ந்துவரும் பொருளாதாரத்தில் விலைவாசி உயர்வைத் தவிர்க்கமுடியாது என்று மந்திரிகள் பிரச்சாரம் செய்து வருகின்றனர்,

## உறுதியான நடவடிக்கை எங்கே?

இந்தக் கூற்றை கம்யூனிஸ்ட் கட்சி மறுக்கிறது. விலைவாசி ஏற்றத்தைத் தடுக்கவேண்டியதன் அவசியம் சம்பந்தமாக 3 திட்டங்களும் சொல்லியிருப்பதை இந்தக் கூற்று நிராகரிப்பதாகும். விலைவாசிகள் ஏறினால் திட்டம் நிறைவேற்றப்

படுவதே பாதிக்கப்படும் எனவும், ஆகவே முந்திய திட்ட காலங்களில் போன்றல்லாது மூன்ருவது திட்ட காலத்தில் விலைவாசிகள் ஏருமலிருப்பதற்காக உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்போவதாகவும் மூன்ருவது திட்டத்தில் கூறப்பட்டுள்ளதை கம்யூனிஸ்ட் கட்சி சுட்டிக்காட்ட விரும்புகிறது.

மந்திரிகள் கூறுவது போன்று, வளர்ந்து வரும் எல்லாப் பொருளாதார அமைப்புகளுக்கும், விலைவாசி ஏறுவது என்பது இன்றியமையாததல்ல ; மாருக, கட்டுக்கடங்காது, தனி நபர்களின் லாப வேட்டையையே பிரதானமாகக் கொண்டுள்ள முதலாளித்துவ வளர்ச்சியில்தான் அது தவிர்க்க முடியாதது ; கடந்த 12 ஆண்டுகளாக இந்நாட்டில் திட்டமிட்டு பொருளாதார வளர்ச்சிக்குப் பாடுபடுவதாக சர்க்கார் பறைசாற்றுகிறது. ஆயினும் நாட்டின் பொருளாதார வாழ்வுக்கு இன்றியமையாத ஜீவநாடியாக உள்ள விலைவாசிகள் ஏறிக்கொண்டே வருவது எதைக்காட்டுகிறது? நாட்டின் பொருளாதாரத்தில் கேந்திரமானதும் நிர்ணயமானதுமான துறைகளில் சர்க்காருக்குப் பிடிப்பு இல்லாதிருப்பதையே இது தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

விவசாயப்பொருள்களை அறுவடையான பிறகு பல மாதங்கள்வரையில் சேமித்துவைத்து அதிகவிலைக்கு விற்பவர்கள் சிறு நிலச்சுவான்தார்களோ அல்லது குத்தகைதாரர்களோ அல்ல ; அதிக நிலம் படைத்த நிலப்பிரபுக்கள்தான் இவ்வாறு விற்பார்கள். இவ்வாறு சேமித்துவைத்து விற்பதற்கு அவர்களுக்கு சக்தி ஏராளமான நிலத்தைக் கையில் வைத்திருப்பதனுலேயே கிடைக்கிறது. சர்க்கார் விவசாயச் சீர்திருத்தம் என்று பேசி காலம் தாழ்த்தி வந்ததன் விளைவு, விவசாயிகளிடமிருந்து நிலம் பெரும் நிலச்சுவான்தார்களிடம் போய்ச் சேரவே உதவியது. காலம் கடத்தி அது கொண்டுவந்த சட்டமும் பயனற்றதாகி நிலம் அக்குடும்பங்களிலேயே இருப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்தது.

ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் இந்தக் காலசட்டம் பூராவிலும் நிலக் குவியல் அதிகரித்து, அதன் விளைவாக நிலப்பிரபுக்களுக்கு விவசாயப் பொருள்களை சேமித்துவைக்க மேலும் சக்தி கூடியுள்ளது.

அதேபோன்று பாங்கிகள் நாட்டின் பொருளாதாரத்தில் கேந்திரமானதோர் பாத்திரத்தை வகிக்கின்றன. 14 பெரிய பாங்கிகளில் மட்டும் 1,000 கோடி ரூபாய்க்கு மேல் 'டிப்பாஸிட்' தொகையாகச் சேர்ந்துள்ளது. இந்தப் பணம் பொது மக்களுடையதாக இருந்தபோதிலும், இதன் நிர்வாகம் கோடீச்வரக் குடும்பங்களின் கையில் இருக்கிறது. இந்தப் பணம் குறைந்த விலைக்குப் பொருள்களை வாங்கி ஸ்டாக் செய்து அதிக விலைக்கு விற்கவும் வர்த்தகச் சூதாட்டத்திற்கும் மற்றும் பெருமுதலாளிகள் நாட்டின் தொழில்களின் மீது ஆதிக்கம் செலுத்துவதற்கும் பயன்படுகிறது. பாங்கியிலுள்ள பணம் வர்த்தகச் சூதாட்டத்திற்குப் பயன்படுவதை ரிசர்வ் பாங்கியின் அறிக்கைகளே சுட்டிக்காட்டியுள்ளன,

## நாட்டிற்கு நஷ்டம்

திட்டத்திற்கான பணத்தைத் திரட்ட சர்க்கார் அனுசரிக்கும் கொள்கையும் மக்களைத் தாக்குவதாகவே இருந்து வருகிறது. அந்நிய முதலாளிகள் கொண்டுபோகும் ஏராளமான லாபம் குறைவதற்குப் பதிலாக, புதிய அந்நிய முதலீடுகளின் விளைவாக, அதிகரித்துள்ளது. அயல்நாட்டு வியாபாரம் போன்ற கேந்திரமானதும் அதிக லாபகரமானதுமான துறை சில பெரிய கம்பெனிகளின் ஏகபோகமாக இருந்துவருவதால் நாட்டுக்கு பல கோடி ரூபாய்கள் ஆண்டுதோறும் நஷ்டம் ஏற்பட்டு வருகிறது.

மேலும் பெருமுதலாளிகளின் லாபம் இதற்குமுன் என்றுமில்லாத அளவு அதிகரித்துள்ளது. பிரிட்டிஷ் ஆட்சியில் நூறாண்டு காலத்தில் அவர்களுக்குக் கிடைத்த லாபத்தைக் காட்டிலும் கடந்த 10 ஆண்டுகளில் அதிக லாபம் கிடைத்துள்ளது என்று பிரதமர் நேருவே தேர்தல் காலத்தில் சுட்டிக்காட்டியுள்ளார். ஆயினும் இவர்களின்மீது அதிக வரிகள் போடுவதற்கு பதிலாக, தொடர்ந்தாற்போன்று அவர்களுக்கு சலுகைகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

இங்கிலையில் திட்டத்திற்காகப் பணம் திரட்டுவதற்கு எக்சைஸ்வரி, விற்பனைவரி போன்று மக்கள் உபயோகிக்கும் பொருள்களின்மீது போடப்படும் வரிகள் ஆண்டுதோறும்

உயர்ந்துகொண்டே வருகின்றன. இந்த வரிகளின் விளை வாகவும் விலைவாசிகள் உயருகின்றன.

நிலக்குவியலைத் தகர்ப்பதும், பாங்கிகளின் நிர்வாகத்தை யும், அயல்நாட்டு வியாபாரத்தையும் சர்க்காரே எடுத்து நடத்துவதும் திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சிக்கு இன்றி யமையாதவை. அதன் மூலம்தான் சர்க்காருக்கு நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் மீது நிர்ணயமான ஆதிக்கம் ஏற்பட்டு. வர்த்தகச் சூதாட்டத்தைத்தடுத்து, சேமிப்புகளைத் தவிர்த்து, விலைவாசிகளை ஸ்திரப்படுத்துவது சாத்தியப்படும்.

இந்த அவசியமான நடவடிக்கைகளை எடுக்க சர்க்கார் மறுப்பதும், அந்நிய மூலதனச் சுரண்டலைத் தடுக்க மறுப்பதும், பெருமுதலாளிகளின் லாபங்களைக் கட்டுப்படுத்த மறுப்பதும் எதைக் காட்டுகின்றன?

## முதலாளித்துவத்தை வளர்க்கிறார்கள்

சர்க்கார் போட்டுள்ள 5 ஆண்டு திட்டங்கள் "சோஷ லிஸத்தை நோக்கி அழைத்துச் செல்பவை" என்ற கூற்றைப் பொய்யாக்குகின்றன. சோஷலிஸம் ஒருபுறமிருக்கட்டும். ஒரு ஜனநாயக சமூகத்தை நிறுவுவதற்கு வேண்டிய அம்சங்கள்கூட சர்க்காருடைய திட்டங்களில் காணமுடியாது. மாறாக சமூக வளர்ச்சியைத் தடைபடுத்தும் நிலப்பிரபுத்துவத்தையும் அந்நிய மூலதன பிடிப்பையும் தகர்க்காமலும், பெருமுதலாளிகளைக் கட்டுப்படுத்த உறுதியான நடவடிக்கைகள் எடுக்காமலும், சர்க்கார் இந்த நாட்டில் முதலாளித்துவத்தை வளர்க்க முயற்சி செய்கிறது. இது அதன் அடிப்படைக் கொள்கை.

இதுவே, விலைவாசிகள் கட்டுக்கடங்காமல் ஏறிக் கொண்டேபோவது சர்க்காருடைய இந்த வர்க்கக் கொள்கை யின் நேரடியான, தவிர்க்கமுடியாத விளைவே.

---

சுதந்திரக் கட்சியும் விலைவாசி ஏற்றத்தை எதிர்ப்பதாகக் கூறுகிறது, "திட்டத்தினால்தான் விலைவாசி உயர்வு, திட்டத்தினால்தான் புதிய வரிகள்" எனக்கூறி திட்டத்திற்கே எதிராக மக்களைத் தூண்டிவிடுகிறது. அதன் கோரிக்கைகள் பொதுவார் துறையை முடமாக்கவும், பெரிய முதலாளிகள் மேலும் கொள்ளையடிக்கவும், அந்நிய முதலாளிகளின்

சுரண்டலுக்கு இன்னும் அதிகமாக நாட்டின் கதவுகளைத் திறந்துவைப்பதற்கும்தான் கொண்டுசெல்லும், அவைகளின் விளைவாக விலைவாசிகள் இன்னும் அதிகமாக உயரவே செய்யும்.

திராவிடநாடு பிரிந்தால் விலைவாசிகள் கட்டுப்படுத்தப் படும் என்ற கூற்றும் தவருனது. தி. மு. கழகத்தார் கிளர்ச்சிக்கென்று வகுத்துள்ள 17 கோஷங்களுமே இக் கூற்றைப் பொய்யாக்குகின்றன. சர்க்காருடைய, பெரு முதலாளிகளுக்குச் சாதகமான இந்தக் கொள்கைதான் விலை வாசி ஏற்றத்திற்குக் காரணம் என்பதைக் கம்யூனிஸ்ட் கட்சி அழுத்தமாக எடுத்துக்கூற விரும்புகிறது.

அதனுல்தான் இந்த அடிப்படைக் கொள்கை மாற்றத்திற் காகக் கம்யூனிஸ்ட் கட்சி தொடர்ச்சியாகப் பாடுபட்டு வந்தி ருக்கிறது. விலைவாசி உயர்வை எதிர்த்து நடக்கும் போராட் டம் இந்த அடிப்படைக் கொள்கையை மாற்றுவதற்கான போராட்டம் என்றே கம்யூனிஸ்ட் கட்சி கருதி வந்துள்ளது.

## *சகலரையும் பாதிக்குப் பிரச்சினை*

விலைவாசி உயர்வு என்பது சகல மக்களையும் பாதிக்கும் பிரச்சினை காங்கிரஸ் கட்சியை ஆதரிக்கும் மக்கள் உட்பட அனைவரையும் விலைவாசி உயர்வு பாதிக்கிறது. இந்திய மக் கள் அனைவரையும் கட்சி, சாதி, மத, திக்குத் திசை வேறு பாடின்றி இந்தியாவின் எல்லா மாநில மக்களின் முன்னேற்றத் தையும் பாதிக்கும் பிரச்சினை இது. ஆகவே கம்யூனிஸ்ட் கட்சி இதை ஒரு கட்சிப் பிரச்சினையாகக் கருதுவதில்லை.

சர்க்காரின் கொள்கையை மாற்றி விலைவாசிகளை பயன் தரத் தக்கவகையில் உறுதியாகக் கட்டுப்படுத்துவதில் அக் கறையுள்ள சகலக் கட்சிகளையும், ஸ்தாபனங்களையும், மக் களையும் திரட்டி ஒன்றுபடுத்திப் போராடக் கம்யூனிஸ்ட் கட்சி எப்பொழுதும் முயற்சி செய்து வந்திருக்கிறது.

---

1959லே தமிழ் நாட்டில் விலைவாசி உயர்வை எதிர்த்து கம்யூனிஸ்ட் கட்சி, தி. மு. க., சோஷலிஸ்ட் கட்சி, தமி ழரசுக் கழகம் முதலிய கட்சிகள் ஒன்று சேர்ந்து கிளர்ச்சி செய்

வதற்கு முன்கை எடுத்தது அனைவருக்கும் நினைவில் இருக்கும்.

பலம் வாய்ந்த பிரதான எதிர்க்கட்சியாக 1952 முதல் வங்கத்தில் இருந்துவரும் கம்யூனிஸ்டுக் கட்சி மக்களுக்கு நிவாரணம் பெற்று தருவதில் அக்கரையுள்ள எல்லாக் கட்சிகளையும் அவை எவ்வளவு சிறியவையாயிருப்பினும் சேர்த்து இத்தகையக் கிளர்ச்சி நடத்தி வருவது தெரிந்ததே. இதே போன்று ஆந்திராவிலும் முதல் எதிர்க்கட்சியான கம்யூனிஸ்டுக் கட்சி சர்க்காருடைய வரிக்கொள்கையை எதிர்த்து பல்வேறு கட்சிகளோடு சேர்ந்து கிளர்ச்சி நடத்தி வருவதும் தெரிந்ததே. பஞ்சாப், உத்தரப் பிரதேசம், குஜரத் முதலிய பல மாநிலங்களில் கம்யூனிஸ்ட் கட்சி பல்வேறு கட்சிகளோடு கூட்டாக சர்க்காருடைய வரிக் கொள்கையையும் விலைவாசி ஏற்றத்தையும் எதிர்த்து கூட்டு நடவடிக்கைகளில் இறங்கி இருப்பதும் தெரிந்ததே.

இவ்வாறு கம்யூனிஸ்ட் கட்சி கூட்டாக நடவடிக்கை எடுக்கக் காரணம் என்ன? மக்கள் பிரச்சினை தீர்க்கப்படுவதற்குப் பரந்த ஒற்றுமை அவசியம், மக்கள் பிரச்சினை தீர்க்கப்படுவது தான் கம்யூனிஸ்ட் கட்சிக்கு பிரதானம். ஏனெனில், மக்களின் நலன்களைத் தவிர, கம்யூனிஸ்ட் கட்சிக்குப் பிரத்தியேகமான கட்சி நலன்கள் ஒன்றும் கிடையாது.

சர்க்காருடைய இந்தக் கொள்கைகள் மாறுவதற்காக நீண்ட காலமாகவே எல்லா மாநிலங்களிலும் போராட்டங்கள் நடந்துவந்திருக்கின்றன. 1960–ம் ஆண்டு ஜுலை மாதத்தில் நாடுபூராவும் உள்ள மத்திய சர்க்கார் சிப்பந்திகள் நடத்திய மாபெரும் போராட்டம் விலைவாசிப் பிரச்சினையின் அவசரத் தன்மையை நாட்டுக்கு முன்நிறுத்தியது. அந்தப்போராட்டத்தை சர்க்கார் கடும் அடக்குமுறையினால் அடக்க முற்பட்டது.

இவ்வளவு போராட்டங்களுக்குப் பிறகும் சர்க்கார் தன் கொள்கையை மாற்ற மறுத்துவந்திருக்கிறது. ஆதிக்க வர்க்கங்களின் பிடிப்பு காங்கிரஸ் கட்சியிலும் சர்க்காரிலும் எவ்வளவு பலமாக உள்ளது என்பதை அது எடுத்துக்காட்டுகிறது. சர்க்கார் கொள்கைகளை மாற்றுமாறு நிர்ப்பந்திப்பது

எவ்வளவு கடினமானது. அதற்கு மேலும் எவ்வளவு பரந்த ஒற்றுமையும், ஒன்றுபட்ட போராட்டங்களும் தேவை என்பதையும் இது எடுத்துக்காட்டுகிறது.

அதே சமயத்தில் சர்க்கார் இவ்வாறு பெரு முதலாளிகளுக்கும் நிலப்பிரபுக்களுக்கும் சாதகமாக உள்ள இந்தக் கொள்கையைத் தொடர்ந்து அனுஷ்டிப்பதனுல் மக்கள் சோர்ந்துவிடவில்லை. அவர்களிடையே எதிர்ப்பு உணர்ச்சியையும், ஒன்றுபட்டுப் போராடவேண்டியது அவசியம் என்ற உணர்வையும் மேலும் வளர்த்துள்ளன. இந்த ஆண்டு இதற்கு முந்தியிராத வகையில் பல மாநிலங்களில் போராட்டங்கள் நடைபெற்றுவருகின்றன

## இந்தியா முழுவதிலும் போராட்டம்

கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக் கவுன்சிலின் செயற்குழுவின் வேண்டுகோளுக்கிணங்க, நாடு பூராவும் எல்லா மாநிலங்களிலும் ஜூன் 17, 18 தேதிகளில் விலைவாசி உயர்வு எதிர்ப்பு, வரிக்கொள்கை எதிர்ப்பு தினங்களாக அனுஷ்டிக்கப்பட்டது.

அதற்கும் முந்தியே மத்திய சர்க்காரின் பட்ஜெட் வெளியானவுடன் நூலின்மீது விதிக்கப்பட்ட புதிய வரிகளை எதிர்த்து கைநெசவுத் தொழிலாளிகளின் போராட்டங்களும் ஆர்ப்பாட்டங்களும், இந்தியாவில் பல நகரங்களில் நடந்தன.

ஜூன் 17, 18 தேதிகளில் நடந்த ஆர்ப்பாட்டங்களையும் பொதுக்கூட்டங்களையும் அடுத்து மேற்கு வங்கம், உத்தரப் பிரதேசம், கிழக்கு பஞ்சாப், ஆந்திரா, குஜரத் முதலிய பல மாநிலங்களில் கம்யூனிஸ்ட் கட்சியும் வேறு பல கட்சிகளும் சேர்ந்து கூட்டு நடவடிக்கைகள் எடுத்து, இயக்கங்களும் போராட்டங்களும் நடைபெற்று வருகின்றன.

இந்தச் சூழ்நிலையில் தமிழ்நாட்டிலும் பரந்த ஒன்றுபட்ட இயக்கமும் ஒன்றுசேர்ந்து முழு போராட்டமும் உருவாவதற்கும் சாதகமான சூழ்நிலை வளர்ந்துகொண்டு வந்தது. அத்தகைய இயக்கம் உருவானுல் அகில இந்திய ரீதியில் சர்க்காருடைய கொள்கையை எதிர்த்து மேலும் பரந்த அளவில்

போராட்டமும் வளர்ந்து பலமடைவதற்கு மிகவும் உதவியா யிருந்திருக்கும்.

## தி. மு. க. வின் தவறுகள்

தமிழ்நாட்டில் பிரதான எதிர்க்கட்சியாக இருக்கும் தி. மு. க. மக்கள் பிரச்சினையாகிய விலைவாசி உயர்வுப் பிரச் சினையை எடுத்தது. ஆயினும் அதன் தலைமையின் குறுகிய தன் கட்சி நலனையே பிரதானமாகப் பார்க்கும் போக்கு இந்தச் சந்தர்ப்பத்தை வீணாக்கியது.

தேர்தலில் ஸ்தானங்கள் கிடைப்பதற்காக எந்தக் கட்சி யின் ஆதரவையும் பெறுவதற்காக தி. மு. க. தலைமை எந்த வித சந்தர்ப்பவாதத்திற்கும் தயங்கவில்லை. ஆனால் சகல மக்களையும் பாதிக்கும் மக்கள் பிரச்சினையாகிய விலைவாசிப் பிரச்சினையில் அந்தத் தலைமை ஏனைய கட்சிகளையோ ஸ்தாப னங்களையோ அணுகத் தயாராக இல்லை ; மாறாக ஜூன் 30-ம் தேதியன்று சட்டசபை முன்பு ஆர்ப்பாட்டத்தையும் ஜூலை 19-ந் தேதியன்று ஒரு நாள் மறியலையும் தன்னந்தனியாக நடத்துவது என்று முடிவு செய்தது.

சென்ற தேர்தலில் பலவித சாகசங்களையும் சந்தர்ப்ப வாதத்தையும் கையாண்டு 50 ஸ்தானங்களைப் பெற்றவுடன், கடந்த 3 மாதங்களாக திராவிட நாட்டுப் பிரிவினை உயிர் மூச்சு என்று கூறி, பிரிவினைப் பிரச்சாரத்தை முடுக்கிவிட்டு தீவிரப்படுத்தியது. தி. மு. க. எந்தப் பிரச்சினையை எடுத்துப் போராட்டம் நடத்தினாலும் அது திராவிடநாட்டு இலட்சியத்திற் கான போராட்டம்தான் என்றுஅதன் தலைமை பறைசாற்றியது.

இந்தப் பின்னணியில் ஜூலை 19ந்தேதி போராட்டத்திற்கு மூன்று தினங்களுக்கு முன்பு நடந்த சென்னை மாவட்ட மாநாட்டில் நிகழ்த்திய உரைகள் மேலும் இனவெறியை ஊட்டின. இந்தப் போராட்டமும் திராவிட நாட்டிற்காக தி. மு. க. நடத்தவேண்டிய போராட்டங்களில் ஒன்று என்ற உணர்வை தி. மு. க. அணிகளிடையே ஏற்படுத்தியதில் வியப்பில்லை. பல இடங்களில் போராட்டத்தின்போது 'திரா விட நாடு திராவிடருக்கே' என்ற கோஷமே பிரதானமாக ஒலித்தது.

சென்னையில் ஜெயின் ஆஸ்பத்திரி தாக்கப்பட்டது. சில வட இந்தியர்கள் நடத்தும் கடைகளும் தாக்கப்பட்டது போன்ற மோசமான சம்பவங்கள் மேற்கூறிய இனவெறிப் பிரச்சாரத்தின் விளைவு. இதற்கான தார்மீகப் பொறுப்பு தி. மு. க. தலைமைக்கு உண்டு. இதை ஏற்றுக்கொள்வதற்குப் பதிலாக, பழியை சில காலிகள் தலையில் போட முயற்சிப்பது தவறானது.

விலைவாசி உயர்வுக்கு, சர்க்கார் அனுஷ்டிக்கும் கொள்கை தான் காரணம் என்பதை அம்பலப்படுத்திக் காட்டுவதற்குப் பதிலாக, திராவிடநாடு லட்சியம் கைக்கூடினால்தான் இப் பிரச்னை தீரும் என்று தி. மு. க. தலைமை பிரச்சாரம் செய்வதன் விளைவு என்ன? உண்மையாகவே விலைவாசி ஏற்றத்தைத் தடுத்து நிறுத்துவதற்காக சர்க்காரின் கொள்கைக்கு எதிராக நாடுபூராவும் வளர்ந்துவரும் போராட்டத்தில் பிளவை ஏற்படுத்தி பலவீனப்படுத்துகிறது.

மக்களின் பிரச்சினையை எடுத்த போதிலும் மக்களின் நலனை, தி. மு. க. தலைமை பிரதானம் என்று கருதவில்லை. இதையும் தன் கட்சியை பலப்படுத்துவதற்கும், கட்சியின் இலட்சியத்தை மேலும் முன்னுக்குக் கொண்டுவந்து நிறுத்தவும் பயன்படுத்த முற்பட்டது. இதனால் தமிழ்நாட்டில் பிரதான எதிர்க்கட்சி என்ற முறையில் தமிழகமக்கள் அதன் மீது சுமத்திய பொறுப்பை தி. மு. க. தலைமை நிறைவேற்றத் தவறியது.

இதனால், சகல மக்களின் ஆதரவையும் பெறவேண்டிய ஒரு போராட்டத்திற்கு வேறு எந்தக் கட்சியின் ஆதரவும், தி. மு. க. வை ஆதரிக்காத மக்களின், ஆதரவும் கிடைக்காமற் போயிற்று. தி. மு. க. தலைமை இந்தப் போராட்டத்தை நடத்துவதில் உள்நோக்கம் இருப்பதாக அவர்கள் நினைத்ததில் வியப்பில்லை.

இந்தச் சூழ்நிலையில் தன்னந் தனியாகப் போராட்டம் நடத்தியதும், இதர கட்சிகளின் இதர மக்களின் தார்மீக ஆதரவு கிடைக்காமலிருந்ததும், சென்னையிலும் வேலூரிலும் நிகழ்ந்த அசம்பாவித சம்பவங்களும் சர்க்காருக்குப் பெரியதோர் வாய்ப்பை சிருஷ்டித்துக் கொடுத்தன. விலைவாசி

உயர்வுப் பிரச்சினையைப்பற்றி ஒன்றும் கூருமல், அதையே மறைத்து 19ந்தேதி போராட்டத்தை ஒருவெறும் சட்டத்தையும் அமைதியையும் நிலைநாட்டும் பிரச்சினையாக சர்க்கார் சித்தரித்தது. தி. மு. க. தலைமையின் நடைமுறை இதற்கு பேருதவியைச் செய்தது. இதனுல், தமிழக மக்களுக்கும் போராட்டத்தில் ஈடுபட்ட தி. மு. க. அணிகளுக்கும் பாதகமான நிலையே ஏற்பட்டது.

சர்க்காருடைய கொள்கையின் மீது ஆட்சேபனையைத் தெரிவிப்பதற்கு அடையாளமாக மறியல் செய்வதே பலாத்காரம் என்ற நிதிமந்திரியின் கூற்றை கம்யூனிஸ்ட் கட்சி நிராகரிக்கிறது. காங்கிரஸ் கட்சியே விடுதலைப் போராட்டகாலத்தில் இவ்வாறு மறியல் செய்துள்ளது. அதை பலாத்காரம் என்று கூறியது கிடையாது. இச்செய்கை பிரிட்டிஷ் சர்க்கார் விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதற்கு போட்ட கிரிமினல் திருத்த சட்டத்திற்கு விரோதமாக இருக்கலாம்; ஆனுல் அது பலாத்காரமாகிவிடாது. ஜனநாயகப் பிரச்சினைகளில் இவ்வாறு மறியல் செய்வதற்கு மக்களுக்கு உரிமை உண்டு.

சட்டசபையும், பாராளுமன்றமும் செயல்படும்போது சட்டசபைகளுக்கு வேளியே மக்களைத் திரட்டிப் போராடுவது ஜனநாயகத்திற்கு விரோதமானது என்ற நிதிமந்திரியின் கூற்றையும் கம்யூனிஸ்ட்கட்சி நிராகரிக்கிறது. கடந்த 10 ஆண்டுகளில் சட்டசபைகளில் பாராளுமன்றத்தில் தங்களுக்குள்ள மெஜாரிட்டியை வைத்துக்கொண்டு மக்களுக்கு விரோதமான நடவடிக்கைகள் பலவற்றை சர்க்கார் மேற்கொண்டுள்ளது. அவைகளுக்குப் பார்லிமெண்டு, சட்டசபைகளின் அங்கீகாரத்தையும் பெற்றிருக்கிறது. அதற்கு பிறகும் இத்தகைய பல்வேறு பிரச்சினைகள்மீது வெளியே விவசாயிகள், தொழிலாளிகள், பொதுமக்கள் நடத்தியுள்ள போராட்டங்களின் விளைவாக ஏற்கனவே சட்டசபைகளும் பாராளுமன்றமும் செய்திருந்த முடிவுகளும் மாற்றப்பட்டுள்ளன. இப்போராட்டங்களையெல்லாம் ஜனநாயகத்திற்கு எதிரானவை என்று கூறுவது முற்றிலும் தவறு.

மறியல் செய்ததற்காக, கிரிமினல் திருத்தச் சட்டத்தைப் பிரயோகிப்பதைக் கம்யூனிஸ்டுக்கட்சி ஆட்சேபிக்கிறது.

இந்தச் சட்டம் 1930, 32-ல் பிரிட்டிஷ் ஆட்சியை ஒழிப்பதற்காக நடந்த சட்டமறுப்பு இயக்கத்தை அடக்குவதற்காக பிரிட்டிஷ் சர்க்கார் பிரத்தியேகமாகப் போட்டது என்பது குறிப்பிடத்தக்கது,

கேரளத்தில் சடடபூர்வமாகத் தோந்தெடுக்கப்பட்ட கம்யூனிஸ்ட் சர்க்காரைக் கவிழ்ப்பதற்காக காங்கிரஸ் கட்சி தலைமை தாங்கி, சென்னையில் நடந்ததைக்காட்டிலும் மோசமான அராஜக நடவடிக்கைகளில் ஈடுபட்டது. அதை எல்லாம் பலாத்காரம் என்று காங்கிரஸ்கட்சி கூறமுன்வரவில்லை! தான் பாதுகாக்க விரும்பும் வர்க்கங்களுடைய நலன்களுக்காக அது எதையும் செய்யும் என்பது தெளிவு. ஆயினும் கேரளக் கம்யூனிஸ்டு சர்க்கார் கிரிமினல் திருத்த சட்டத்தைக் கையாளவில்லை, பயன்படுத்தவில்லை.

## போலீசின் அத்துமீறிய செயல்கள்

19-ந் தேதிக்குப்பிறகு போலீஸ் சென்னையில் சேரிகளில் புகுந்து நிரபராதிகளான மக்களை துன்புறுத்தியதாக புகார்கள் வந்துள்ளன. இரவு நேரங்களில் குடிசைகளிலும் வீடுகளிலும் புகுந்து மக்களைப் புடைத்தும், சட்டிபானைகளையும் பண்டம் பாத்திரங்களையும் உடைத்து நொறுக்கியும், பீதியுறச் செய்வதற்கு வேண்டியே போலீஸ் வழக்கமான பலவித அக்கிரமங்களிலும் ஈடுபட்டுள்ளதாக புகார் வந்து கொண்டேயிருக்கின்றன.

திண்டுக்கல்லில் மறியல் செய்தவர்களை எந்தவிதக் காரணமும் இன்றி போலீஸ் உதைத்தது, சிறைகளிலே இந்தப் போராட்டத்தில் கைது செய்யப்பட்ட தி. மு. க. அணிகளை உதைத்து மன்னிப்புக் கடிதங்கள் வாங்குவதாகப் புகார்கள் வந்துள்ளன. மேலும் சிறை விதிகளின்படியே அவர்களுக்கு அளிக்கவேண்டிய சாதாரண வசதிகளும் மறுக்கப்படுவதாகவும் வந்துள்ளன. சிறையிலுள்ளவர்களை—அவர்கள் யாராயினும்—மனிதாபிமானத்துடன் நடத்தவேண்டியது சர்காரின் கடமை என்பதை கம்யூனிஸ்ட்கட்சி வற்புறுத்துகிறது!

## விசாரணை தேவை

இந்தப் புகார்களை சர்க்கார் மறுத்துள்ளது. ஆனால் எந்த அதிகாரிகள் இவ்வாறு கொடுமைப்படுத்துவதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளதோ அதே அதிகாரிகளின் ரிப்போர்ட்டின் அடிப்படையிலேயே இப்புகார்கள் மறுக்கப்படுகின்றன. இது மக்களுக்குத் திருப்தியளிக்காது. இப்புகார்கள்மீது பாரபட்ச விசாரணை நடத்துவது சர்க்காருடைய கடமையாகும். அதிகாரிகளின் தவறுகளை மறைக்கும் எண்ணம் சர்க்காருக்கு இல்லை என்றால் பாரபட்சமற்ற விசாரணை நடத்துவதற்கு எவ்விதத் தயக்கமும் இருக்கவேண்டியதில்லை.

## விடுதலை செய்க!

போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக உபயோகிக்கும் இம் முறைகளும். ஜாமீன் மனுக்களை எதிர்ப்பதும், சர்க்கார் வஞ்சம் தீர்த்துக்கொள்ளும் முறையில் நடந்துகொள்கிறது என்ற எண்ணத்தைத்தான் மக்களிடையே உண்டாக்கும்.

இந் நிலையில் இப் போராட்டத்தில் மறியல் செய்ததற்காகக் கைதானவர்களை விடுதலை செய்யுமாறு கம்யூனிஸ்டு கட்சி சர்க்காரைக் கோருகிறது.

சட்டசபைகளைப் பகிஷ்கரிப்பதே ஜனநாயகத்திற்கு விரோதம் என்ற நிதிமந்திரியின் கூற்றை கம்யூனிஸ்டுக் கட்சி ஏற்கவில்லை. சில சந்தர்ப்பங்களில் ஜனநாயகத்தை வளர்ப்பதே இதற்கான அவசியம் ஏற்படலாம்!

ஆனால் 19–ந் தேதி போராட்டத்தில் சர்க்கார் நடந்து கொண்ட முறை சம்பந்தமாக சட்டசபையில் விவாதிப்பதற்கு அவகாசம் போதிய அளவு இருந்தபோது, அதைப் பயன் படுத்தாது வெளியிலிருந்த 34 தி.மு.க. அங்கத்தினர்கள் சட்ட சபைக்கு ஒரு நாளும் வராமலிருந்தது சந்தர்ப்பத்தை நழுவி விட்டது மக்களுக்குப் பெரிய தீங்கைத்தான் இழைத்துள்ளது. சகல மக்களையும் பாதிக்கும் பல வரிகள் இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டன. அவைகளைப் பற்றிய விவாதத்தில் தி. மு. க. எம். எல், ஏ. க்கள் கலந்து கொள்ளாமலிருந்த

தன் மூலம் பிரதான எதிர்க்கட்சி என்ற முறையில் மக்களுக்கு ஆற்றவேண்டிய கடமையையும் பொறுப்பையும் தி. மு. க. நிறைவேற்றத் தவறியது.

## பிரச்சினை தீரவில்லை தொடர்ந்து போராடுவோம்

சென்னையிலும், வேலூரிலும் நடந்த சம்பவங்களைப் பயன்படுத்தி, அடிப்படைப் பிரச்சினையாகிய விலைவாசி பிரச்சினையை சர்க்கார் புறக்கணிக்க முற்படுவது ஆபத்தாகும் என்று கம்யூனிஸ்டுக் கட்சி சர்க்காரை எச்சரிக்கிறது.

விலைவாசி உயர்வைத் தடுக்கும் பிரச்சினை 19-ந் தேதி மறியலுடனே சர்க்கார் எடுத்த நடவடிக்கைகளுடனே தீர்ந்து விட்ட பிரச்சினையாகிவிடவில்லை. சர்க்கார் கொள்கையை மாற்றுமாறு நிர்ப்பந்திப்பதற்காக நாடு பூராவும் தழுவிய, மிகப் பரந்த இயக்கங்களும் போராட்டங்களும் தேவை என்பதையே 19-ம் தேதி போராட்டமும் சர்க்கார் நிலையும் ஊர்ஜிதம் செய்கின்றன.

கம்யூனிஸ்டுக் கட்சி சம்பந்தப்பட்டமட்டில், எவ்வளவு கஷ்டங்கள் இருந்தபோதிலும் ஆரம்பத்தில் கூறிய முறையில் சர்க்காருடைய அடிப்படைக் கொள்கைகளை மாற்றி, விலைவாசிகளைக் கட்டுப்படுத்தி மக்களும், நாடும் சுபீட்ச வாழ்வை நோக்கிச் செல்வதற்காக, இதன் அவசியத்தை ஏற்றுக்கொள்ளும் சகல கட்சிகளையும், ஸ்தாபனங்களையும் அணுகி, மக்களையும் அணுகி ஒரே அணியில் சேர்ந்து நின்று போராடுவதற்காகத் தொடர்ந்து பாடுபடும் என்று உறுதி கூறுகிறது. இப்பணியில் மக்கள் சம்பந்தப்பட்டமட்டில், அவர்கள் எந்தக் கட்சியை ஆதரிப்பவர்கள் என்பதைப்பற்றி கம்யூனிஸ்ட் கட்சி கவலைப்படாது. காங்கிரஸ் கட்சியை ஆதரிக்கும் மக்களையும் இந்த அணியில் திரட்ட அது தொடர்ந்து முயற்சிக்கும். ஏனெனில் அவர்களுடைய வாழ்க்கை அனுபவம் சர்க்காருடைய அடிப்படைக் கொள்கையை மாற்றாவிடில் அவர்களுடைய வாழ்வு மோசமாகிக்கொண்டே இருக்கும் என்பதை நிச்சயமாக உணர்த்தும்; அதேபோன்று பரந்த போராட்டங்கள் இன்றி கொள்கை மாற்றமும் ஏற்படாது என்ற உண்மையையும் வாழ்க்கை அனுபவம் உயர்த்தும்.

இத்தகைய ஒன்றுபட்ட இயக்கத்திற்காகப் பாடுபடும்படி கம்யூனிஸ்ட்கட்சி மக்களின் நலன்களில் அக்கரையுள்ள சகலக் கட்சிகளையும் வேண்டுகிறது. தி. மு. க. தலைமையும், அணிகளும் 19-ந் தேதி போராட்டத்தின் அனுபவங்களைக் கொண்டு இத்தகைய ஒன்றுபட்ட போராட்ட இயக்கத்திற்காகப் பாடுபடவேண்டும் என்று கோருகிறது.



ஜனசக்தி பிரஸ், 32, பிராட்வே, சென்னை-1